රාජ්‍ය පරිපාලන හා කළමනාකරණ අමාත්‍යාංශය
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
MINISTRY OF PUBLIC ADMINISTRATION AND MANAGEMENT

ඒකාබද්ධ සේවා අංශය இணைந்த சேவைகள் பிரிவு COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

| දුරකතනය<br>தொலைபேசி: (94) 011- 2694560<br>Telephone | ෆැක්ස්<br>தொலைநகல்: (94) 011- 2692254<br>Fax | ඊ-මේල්<br>மின்னஞ்சல்: dgcs@pubad.gov.lk<br>E-mail | වෙබ් අඩවිය<br>இணைத்தளம்: www.pubad.gov.lk<br>Web Site |
|---|---|---|---|

---

| මගේ අංකය<br>எனது இல<br>My No | CS/DOS/24/01/01 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி:<br>Date | 2016.03.31 |
|---|---|---|---|---|---|

அனைத்து அமைச்சின் செயலாளர்கள்/
திணைக்களத் தலைவர்கள்/
மாவட்டச் செயலாளர்களுக்கு

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனத்தை உறுதிப்படுத்தல்</u>**

தகுதிகூர் நிலை காலம் முடிவுற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களுள் நியமனத்தை உறுதி செய்வதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் தொடர்பான கீழ் குறிப்பிடப்படும் **<u>ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை</u>** உமது சிபாரிசு சகிதம் உடனடியாக எனக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் அறியத்தருகிறேன். (இவ் ஆவணங்களை அனுப்பி வைக்கையில் அலுவலரது நியமனக் கடித இலக்கத்தை **(CS/DOS/XXXXX)** குறிப்பிட்டு அனுப்புதல் கட்டாயமானது என்பதை கருத்திற் கொள்க.) மேலும், இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கு பொருத்தமான அலுவலர் ஒருவரை நியமித்து அவரது அலுவலக தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்புமாறும் அறியத்தருகிறேன்.

- கடமையைப் பொறுப்பேற்ற கடிதம் (பின்னிணைப்பு 03 மற்றும் பின்னிணைப்பு 04)
- E- hrm படிவம் (மூலப்பிரதி)
- தகுதிகூர் நிலை காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட விடுமுறை/லீவு தொடர்பான அறிக்கை (மூலப்பிரதி)
- படிவம் சுகாதாரம் 169 மீதான மருத்துவ அறிக்கை
- பல்கலைக்கழக பட்டத்தின் விரிவான பெறுபேற்றுக் கூற்று (Detail Certificate)
- வெளிநாட்டுப் பல்கலைக்கழக பட்டம் எனின், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரக் கடிதம்
- பல்கலைக்கழகத்தினால் பட்டத்தை உறுதிப்படுத்திய கடிதம் (மூலப்பிரதி)
- உடன்படிக்கை/ பிரகடனம் (பொது 278)
- சொத்துக்கள், பொறுப்புகளின் பிரகடனம் (பொது 261)
- படிவம் பொது 160 இல் சேவை உடன்படிக்கை
- நன்னடத்தை பற்றிய பிரகடனம் (அரசியலமைப்பின் 157 (அ) மற்றும் 167 (ஈ) (III) ஏற்பாடுகளுக்கமைய)
- வரலாற்றுத்தாள் (பொது 53 அ)
- அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிக் கோவையின் பிரகாரம் மூன்று வருட சேவை அறிக்கை ( மூலப்பிரதி)
- வினைத்திறமை காண் தடைதாண்டல் பரீட்சை பெறுபேற்றுப் பிரதி (இதுவரை எமக்கு அனுப்பி வைத்திராவிடின் மாத்திரம்)

**இது உமது தனிப்பட்ட கண்காணிப்பில் இடம்பெற வேண்டுமென்பதை உமது கவனத்திற்கு கொண்டு வருகிறேன்**

ஒப்பம்./கே.வீ.பீ.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்